**இலங்கை தேயிலை சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேயிலை சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட:டு கொள்கைகளை நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலை அதிகாரச் சட்டத்திலுள்ள மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

| உரிய நியமங்களுடனான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் மீளாய்வாண்டின் இறுதியளவில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ரூபா 183,520,144 கிரயமான சொத்துக்கள் இன்னும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் அச்சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலத்தினை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் அல்லது கணக்குகளில் வெளிப்படுத்துதல் | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இந்த அனைத்து சொத்துக்களையும் முறைப்படியாக மீளளிப்புச் செய்வதற்கும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முழுமையாக பெறுதமானத் தேய்வு முடிவடைந்திருந்த போதிலும் பயன்படுத்துகின்ற சொத்துக்கள் சம்பந்தமாக வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படவில்லை. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது மீளாய்வாண்டில் வரிக்கு முன்னைய இலாபத்திற்கு உரிய செம்மையாக்கல்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் சபையின் வரிக்கு பின்னைய இலாபத்தினைப் பயன்படுத்தி காசுப்பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்கல்கள் செய்யப்பட்டிருந்தன. | சரி செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது மீளாய்வாண்டின் வரிக்கு முன்னைய இலாபத்திற்கு உரிய செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆம் ஆண்டின் போது ரஸ்யாவின் மொஸ்கோவில் நடைபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட “Prodexpo 2024” கண்காட்சியின் வீசா மற்றும் கண்காட்சி கூடத்தினை ஒதுக்கீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 5,573,342 தொகையை முற்கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்படாது மீளாய்வாண்டிற்கான செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் அத்தொகையால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் மிகைக் கணக்கீடு செய்யப்பட்டு கொடுப்பனவுகள் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் தற்பொழுது உரிய சரிசெய்தல்கள் செய்யப்பட்டுள்ளன. | எதிர்காலத்திற்காகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டின் போது குறைத்து கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 4,800,000 தொகை சர்வதேச கண்காட்சி மற்றும் வியாபாரச் சந்தைக்காக பங்குபற்றும் செலவுகள் கணக்கீடு செய்யப்படுகின்ற மேம்படுத்தல் மற்றும் விற்பனை வைப்புக் கணக்கிற்கு செம்மையாக்குவதற்குப் பதிலாக நிறுத்திவைத்த உழைப்புக்களின் கீழ் செம்மையாக்குவதன் மூலம் அப்பெறுமதியால் நிறுத்திவைத்த உழைப்புக் கணக்கு குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டு மேம்படுத்துதல் மற்றும் | நாட்குறிப்பின் மூலம் தற்பொழுது மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் வைப்புக் கணக்கிற்கு உரிய செம்மையாக்கல் செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சந்தைப்படுத்துதல் கணக்கு மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | சர்வதேச கண்காட்சிகள் மற்றும் வியாபார சந்தைகளுக்காக பங்குபற்றுவதற்காக 05 ஏற்றுமதியாளர்களிடமிருந்து 2021 ஆம் ஆண்டின் போது கிடைத்த முற்பணங்களில் ரூபா 586,550 முற்பணத்தை மீளாய்வாண்டின் போது மீளச் செலுத்தும் போது மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக சர்வதேச கண்காட்சிகள் மற்றும் வியாபாரச் சந்தைகளுக்காக பங்குபற்றும் செலவு கணக்கிற்கு வரவுவைத்ததனால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் ரூபா 586,550 ஆல் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இக்கொடுப்பனவுகள் சம்பந்தமாக சிக்கலான நிலைமை உருவாகியுள்ளதனால் கொடுப்பனவுகள் சம்பந்தமாக முறையான ஆலோசனைகள் கிடைக்கும் வரை இந்த ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தை வைத்திருப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அமுல்ப்படுத்தபடாத செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளை மீண்டும் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | "சிலோன் ரீ" இற்காக உலகளாவிய மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் 06 புத்துருவாக்க செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு சபையினால் 2022 ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தும் அதற்காக 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 9,414,411 தொகையான ஒதுக்கீடுகளை மீண்டும் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது மீளாய்வாண்டின் இறுதிவரையும் சந்தைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் அத்தொகையால் நடைமுறைப் பொறுப்புக்கள் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டு மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் வைப்புக்கள் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அனைத்து சர்வதேச கண்காட்சிகள் மற்றும் வியாபாரச் சந்தைகளுக்காகப் பங்குபற்றும் செலவுகள் முற்பணக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படுவதன் மூலம் இவ்வாறான தவறுகள் மிண்டும் ஏற்படாமல் இருப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கிடைத்த முற்பணங்களைத் தீர்த்துவைக்கும் போது சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | சபையின் பூர்த்திசெய்த தேயிலைப் பொதிகளுக்கு (SLTB Official Packer) செலுத்த வேண்டிய | நாட்குறிப்பின் மூலம் தற்பொழுது இடம்பெற்ற தவறு திருத்தப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதிகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 4,534,238 தொகையானது செலுத்த வேண்டியவையாக இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது சபையின் பூர்த்திசெய்த தேயிலைப் பொதியினால் பிரதான களஞ்சியத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 2,628,416 பெறுமதியான பூர்த்தியான தேயிலை இருப்புக்கள் தேயிலை விற்பனை நிலையங்களின் விற்பனைக் கிரயத்திற்குள் உள்ளடக்கப்பட்டதனால் ஆண்டிற்கான மிகைகள் அப்பெறுமதியால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டின் இலாபத்திற்கு செம்மையாக்கி மூலம் 2023 ஆம் ஆண்டில் இடம்பெற்ற குறைபாடுகள் நாட்குறிப்பின் மூலம் சரிசெய்யப்பட்டது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பூர்த்தியான தேயிலை இருப்புக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | மேம்படுத்துதல் நடவடிக்கைகளுக்காக இலவசமாக (FOC) மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ரூபா 905,187 தொகையான மேம்படுததல் பொருட்கள் (தேயிலை மற்றும் பொதியிடல் பொருட்களை தவிர்த்து) வெளிநாட்டு செயற்பாடுகளுக்காக தேயிலையை வழங்குதல் செலவுக் கணக்கிற்கு வரவு வைத்து விற்பனைக் கிரயத்திற்கு செலவுவைக்கப்பட்டிருந்ததனால் ஆண்டிற்கான விற்பனைக் கிரயம் ரூபா 905,187 ஆல் குறைத்தும் செலவுக் கணக்கு அத்தொகையால் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டின் இலாபத்திற்கு செம்மையாக்கி மூலம் 2023 ஆம் ஆண்டில் இடம்பெற்ற குறைபாடுகள் நாட்குறிப்பின் மூலம் சரிசெய்யப்பட்டது. | விற்பனைக் கிரயத்திற்கான தேவையான செம்மையாக்கல்களை சரியாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஏ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதி இருப்பு பெறுமதியை கணக்கீடு செய்யும் போது பிரதான களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 3,774,644 தொகையான துணி உறைகள் இருப்பானது மேம்படுத்துல் பொருட்கள் மற்றும் காகிதாதிகள் ஆகிய இரண்டு கணக்குகளிலும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் நிதிக்கூற்றுக்களில் அத்தொகைகள் பொதுப் பாவனைப் பொருட்களின் இருப்பு பெறுமதி மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் முன்னைய ஆண்டிற்கான இலாபத்திற்கு செம்மையாக்கி தற்பொழுது சரிசெய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இருப்புக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ரூபா 51,300,000 தொகையான சேதனப் பசளை நிவாரண செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யும் ஒரு கணக்கு காணப்பட்டிருந்தும் 2023 ஆம் ஆண்டின் போது அச்செயற்திட்டத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 1,100,000 தொகையான நிவாரணம் ஒதுக்கீடு செய்யும் கணக்கிற்கு வரவுவைக்கப்படாது செலவுக் கணக்கிற்கு வரவுவைக்கப்பட்டிருந்ததனால் ஆண்டிற்கான மிகை அத்தொகையால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டு சேதனப் பசளை நிவாரண செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்தல் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | நிவாரணத் தொகையை செலவுக் கணக்கிற்கு வரவுவைத்தல் நாட்குறிப்பின் மூலம் தற்பொழுது சரிசெய்யப்பட்டுள்ளது | நிவாரணம் பெறுபவர்களுக்கு பணத்தை வழங்குதல் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஒ) | தேயிலை விற்பனை நிலையங்களில் சபையின் பூர்த்தியான தேயிலை இருப்பின் விற்பனையின் மூலம் (Tea Sale) பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 4,208,900 தொகை ஏற்றுமதி பொதி விற்பனையின் மூலம் பெற்ற வருமானமாக (Exporter Pack Sale income) அடையாளம் காணப்பட்டிருந்தது. இதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதியில் தேயிலை விற்பனை வருமானம் ரூபா 4,208,900 ஆல் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்குப் பதிவுகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபையின் விற்பனை வருமானத்தை சரியாக வகைப்படுத்தி கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| ஆய்வுகூட வருமானம் | 31,589,500 | 42,927,750 | 11,338,250 | ஆய்வுகூட பிரிவினால் மேற்கொண்ட அனைத்து பரீட்சிப்பிற்கு மத்தியில் கட்டணம் | சபையின் ஆய்வுகூட பரீட்சிப்பு சம்பந்தமான உள்ளக்கட்டுப்பாட்டினை |

| | | |
|---|---|---|
| | அறவீடு செய்தல் அல்லது அறவீடு செய்யாமை தேயிலை ஆணையாளர் பிரிவினால் தீர்மானிக்கப்படுவதுடன் அறவிடப்படாத மாதிரிகளுக்கான ஆய்வுகூட வருமானத்தை மீண்டும் செம்மையாக்குவதற்கு தேயிலை ஆணையாளர் பிரிவினால் ஆய்வுகூட பிரிவிற்கு தெரியப்படுத்தப்படாததன் அடிப்படையில் இந்த வருமான முரண்பாடு உருவாகுதல் இடம்பெற்றுள்ளது. | வலுப்படுத்தி அந்த வருமானத்தினை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டின் போது உலகளாவிய தேயிலை உபசரிப்பிற்காக வெளிநாட்டு தூதுவராயலங்களுக்கு வழங்கிய ரூபா 51,604,457 பணத்தில் 15 நாடுகளில் மிகுதியான ரூபா 918,679 பணம் மற்றும் சீனா, ஐக்கிய இராச்சியம், மொஸ்கோ ஆகிய நாடுகளின் தூதுவராயலங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 868,578 பணத்தை உரிய தூதுவராயலங்களினால் இலங்கை வெளிவிவகார அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரை அந்த | வெளிநாட்டு விவகார அமைச்சினால் பொதுவைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தை துரிதமாக இலங்கை தேயிலைச் சபைக்கு விடுவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி கிடைக்க வேண்டிய பணத்தை தீர்த்துவைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பெறவேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ஐக்கிய அரப் எமிரேட் நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை தேயிலை சபையின் தேயிலை மேம்பபாட்டு பிரிவின் நடவடிக்கைகளை 2022 ஏப்ரல் 30 ஆந் திகதியிலிருந்து நிறுத்துவதற்கு 2022 பெப்ரவரி 28 ஆந் திகதிய பணிப்பாளர் சபையின் 2022/513/10 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பிரிவின் நிலையான சொத்துக்கள் மற்றும் நடைமுறை கணக்கின் மீதிகள் முறையே ரூபா 1,849,494 மற்றும் ரூபா 8,237,377 தொகைகள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | பல சந்தர்ப்பங்களில் நடைமுறைக் கணக்கின் மீதி தொடர்பாக துாதுவராயலங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் அதற்கு பதில் வழங்கியிருக்கவில்லை. தேயிலை மேம்பாட்டுப் பிரிவின் பொறுப்பில் காணப்பட்ட நிலையான சொத்துக்கள் கொன்சியூலர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான அறிக்கையைப் பெற்று சொத்துக்களை செம்மையாக்குகுவதற்கு 2024 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் மற்றும் நடைமுறைக் கணக்கின் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஐக்கிய அரப் எமிரேட் நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை தேயிலைச் சபையின் தேயிலை மேம்பாட்டு பிரிவிற்காக 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 2,366,735 கிரயமான மோட்டார் வாகனம் 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி ரூபா 1,098,063 (AED 12,500) தொகைக்கு விற்பனை செய்ததன் மூலம் பெற்ற பணம் இலங்கை வெளிவிவகார அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் 2024 மார்ச் மாதம் வரை அப்பணம் சபைக்கு கிடைத்திருக்காததுடன் கிடைக்க வேண்டிய மீதியாக கணக்கீடு | வெளிவிவகார அமைச்சினால் இலங்கை தேயிலை சபைக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை தீர்த்துவைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செய்யப்பட்டிருந்தது.

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தேயிலை கொழுந்து உரிமையாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை செலுத்தாமையினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்காக செலுத்துவதற்கு மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகளின் உரிமையை மாற்றும் போது தேயிலை கொழுந்து உரிமையாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களால் சபையில் வைப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை முறைப்படியாகத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத ரூபா 90,304,143 வைப்பு காணப்பட்டதுடன் அதனுள் 05 ஆண்டுகளை மீகைத்த வைப்புக்களின் அளவு ரூபா 4,759,784 ஆகும். | தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களால் தேயிலைக் கொழுந்து வழங்குபவர்களுக்கு செலுத்த வேண்டியுள்ள பணத்தை செலுத்தும் நடவடிக்கைக்காக தேவையான அங்கீகாரம் பிராந்திய அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பிராந்திய அலுவலகங்களின் மூலம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தேயிலை ஆணையாளர் பிரிவிற்கு தெரியப்படுத்தியதன் பின்னர் அது சம்பந்தமான செயல்முன்னேற்றத்தை அடுத்துவரும் 03 மாதங்களின் போது தீர்த்துவைத்து கணக்காய்வுப் பிரிவிற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய தரப்பினர்களை சரியாக அடையாளங்கண்டு அவர்களுக்கு தகமையுள்ள பணத்தை துரிதமாக தீர்த்துவைத்தல் வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தேயிலைச் சபையினால் 25 மில்லியன் தேயிலை நாற்றுக்கள் விசேட செயற்திட்டத்திற்காக சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2021 யூலை 14 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 125,000,000 முற்பணத்தில் ரூபா 33,470,665 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முற்பணக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதிகாரசபையுடன் மேற்கொள்ளப்பட்ட | கொடுப்பனவு வவுச்சர்களை துரிதமாக வழங்குமாறு சிறி தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையினால் தெரியப்படுத்தப்பட்டது. அந்த வவுச்சர்கள் கிடைத்த உடன் கணக்குகளை செம்மைப்படுத்தி வவுச்சர்ளை | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட காலம் முடிவடைந்ததனால் மிகுதிப் பணத்தை மீண்டும் அறவீடு செய்வதற்கும் உரிய முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கும் சபையினால் துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| புரிந்துணர்வு உடன்படிக்கையின் காலமும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படாத பெறுமதி காணப்படுமாகவிருந்தால் மீண்டும் அறவீடு செய்வதற்கு மற்றும் உரிய முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலிவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2010 ஒக்தோபர் 27 ஆந் திகதிய 1677/14 ஆம் இலக்க சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் 02 மற்றும் 03 ஆம் பணிப்புரைகள் | தேயிலையை ஏற்றுமதி செய்வதற்காக வாய்ப்பளித்து இலங்கை தேயிலைச் சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் சுங்க வரி வெளிப்படுத்தலில் (CUSDEC) அனுமதி வழங்கப்படுகின்ற வேளைகளில் அனைத்து தேயிலை கிலோ கிராம்களுக்காகவும் அனைத்து பதிவுசெய்த தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கும் ரூபா 3.50 வரியினை அறவீடு செய்யும் வர்த்தமானி 2021 திசெம்பர் 14 ஆந் திகதிய 2258/15 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் இரத்துச் செய்யப்பட்டிருந்தும் 2021 திசெம்பர் 15 இலிருந்து 2023 ஆகஸ்ட் 04 ஆந் திகதி வரை சபையினால் தேயிலை ஏற்றுமதியாளர்களிடமிருந்து ரூபா 1,003,428,373 | தேயிலை சபை அதிகாரச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் வரியினை அறவீடு செய்தல் சட்டரீதியற்றது என சட்ட வரைஞர் திணைக்களம் தெரியப்படுத்தியதன் பின்னர் 2021.12.14 ஆந் திகதிய 2258/15 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் 2010.10.29 ஆந் திகதிய 1677/14 ஆம் இலக்க வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பணிப்பாளர் சபையின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ரூபா 3 வரிப் பணம் ஏற்றுமதியாளர்களால் தேயிலைச் | பணிப்புரையை தயாரிக்கும் போது அதன் சட்டரீதியான ஏற்பாடு தொடர்பாக கவனம் செலுத்தி முறைப்படியாகவும் காலத்திற்கு பொருத்தமாகவும் பணிப்புரையை விதித்தல் மற்றும் அமுல்ப்படுத்துதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறவீடு செய்யப்பட்டிருந்தது. | சபைக்கு செலுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | சபையின் மனித வளங்கள் முகாமைத்துவத்தினை உள்ளடக்கிய செயற்பாட்டு நடைமுறை மற்றும் நிருவகித்தல் தொடர்பான செயற்பாட்டு கையேடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை சபை அதன் நடவடிக்கைகளை முடிவுறுத்தியிருக்கவில்லை. | செயற்பாட்டு கையேட்டினை வரைபாக்கும் நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செயற்பாட்டு கையேட்டினைத் தயாரித்து அதன் செயற்பாடுகளை முறையான அங்கீகாரத்தின் கீழ் அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 194,872,796 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 210,289,737 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 15,416,941 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அபிவிருத்தி, நிருவாகம், நிதி செலவுகள் என்பன முறையே ரூபா 190,785,879 ரூபா 59,914,670 மற்றும் ரூபா 72,914 ஆல் அதிகரித்துச் செல்லல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| | 2023 | 2022 | வேறுபாடு | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருமானம்** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| ஆய்வுகூட வருமானம் | 31,589,500 | 19,802,796 | 11,786,704 | 60 |
| அபிவிருத்தி செலவுகளுக்காக மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் வரி நிதியத்திலிருந்து பெற்ற ரூபா 1.50 வருமானம் | 212,786,346 | - | 212,786,346 | 100 |
| அபிவிருத்திச் செலவுகளுக்காக அனுமதிப்பத்திர வருமானத்திலிருந்து பெற்ற ரூபா 1.50 வருமானம் | 154,483,798 | - | 154,483,798 | 100 |
| மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் வரி நிதியம் | 150,000,000 | 409,228,000 | 259,228,000 | 63 |
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | 112,610,616 | 75,129,356 | 37,481,260 | 50 |
| வணிக செயற்பாடுகளின் மூலம் உழைத்த இலாபம் | 21,812,366 | 10,200,165 | 11,612,201 | 114 |
| ஏனைய வருமானம் | 11,927,460 | 8,656,261 | 3,271,199 | 38 |
| **செலவினங்கள்** | | | | |
| அபிவிருத்திச் செலவுகள் | 335,444,475 | 144,658,596 | 190,785,879 | 132 |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதிச் செலவுகள் | 247,508 | 174,594 | 72,914 | 42 |
| நிருவாகச் செலவுகள் | 564,794,804 | 504,880,134 | 59,914,670 | 12 |

அபிவிருத்திச் செலவுகளுக்காக மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் வரி நிதியத்திலிருந்தும் அனுமதிப்பத்திர கட்டண வருமானத்திலிருந்தும் பெற்ற வருமானம் ரூபா 367,270,144 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது தேயிலையை மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் வரி நிதியத்தின் வட்டி வருமானத்தில் தேயிலைச் சபைக்கு மாற்றப்பட்ட பணத்தின் அளவு 63 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் ஆய்வுகூட வருமானம் 60 சதவீதத்தினாலும், நிலையான வைப்பு வட்டி வருமானம் 50 சதவீதத்தினாலும், வணிக செயற்பாடுகளின் மூலம் உழைத்த இலாபம் 114 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. அபிவிருத்தி நிதி, நிருவாகம் ஆகிய செலவுகள் முறையே 132 சதவீத்திால், 42 சதவீதத்தினால் மற்றும் 12 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் நடைமுறை மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிததங்கள் 3:1 மற்றும் 3:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அந்த விகிதங்கள் 7:1 மற்றும் 7:1 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச் சொத்துக்கள் 29 சதவீத்தினால் அதிகரித்திருந்த போதிலும் ஈரான் உடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பெற்றோலிய உடன்படிக்கையின் கீழ் 2023 ஆண்டின் போது சபைக்கு கிடைத்த ஏற்றுமதியாளர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,732,026,204 தொகை காணப்பட்டதன் மூலம் நடைமுறைப் பொறுப்புக்கள் 184 சதவீதத்தால் அதிகரித்திருந்ததன் காரணமாக இந்த விகிதத்தினை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 55 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை பிராந்திய அலுவலகம் செயற்படுகின்ற 01 ரூட் 20 பேச்சர்ஸ் அளவான காணியை 2014 ஆம் ஆண்டிலிருந்து 30 ஆண்டுகள் காலத்திற்காக இலங்கை தேயிலைச் சபைக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு காணி ஆணையாளர் நாயகத்தினால் மேல் மாகாண காணி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட 4/10/37833 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இதுவரை குத்தகை உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | இலங்கை தேயிலைச் சபை வேண்டுகோள் விடுத்திருந்தும் குத்தகை உடன்படிக்கையை தயாரித்தலானது பாலிந்த நுவர பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படுவதனால் இதுவரை அந்த குத்தகை உடன்படிக்கை தயாரித்து சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக இந்த உடன்படிக்கை செய்தல் தாமதமடைந்துள்ளது. | சட்டரீதியான குத்தகை உடன்படிக்கை மேற்கொள்வதன் மூலம் சொத்துக்களின் நிருவாகம் முறைமைப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நுவரெலியா பிராந்திய அலவலகம் செயற்படுகின்ற காணியின் உரிமையானது காணி பெருந்தோட்ட கம்பனியாலும் நுவரெலியா பிரதேச செயலகத்தினாலும் சட்டரீதியாக சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | நுவரெலியா பிராந்திய அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியை இலங்கை தேயிலைச் சபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இக்காணியை பொறுப்பேற்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் போது ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்வதன் காரணமாக தாமதிக்கின்றது எனவும் அது தேயிலைச் சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு விடயம் எனவும் தெரிவிக்கப்பட்டது. | சட்டரீதியான உரிமை இல்லாத ஒரு காணியில் கட்டிடம் நிர்ணயிக்கப்பட்டுள்ளத னால் காணியின் சட்டரீதியான உரிமையை சபைக்குப் பெற்றுக்கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை தேயிலை சபையின் நுவரெலியா பிராந்திய அலுவலகத்தின் தேயிலை விற்பனை நிலையத்திலிருந்து 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபையினால் அறவிட வேண்டிய ரூபா 986,253 குத்தகை பணத்தை அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | பெரிய வெள்ளி தாக்குதல் மற்றும் கொவிட் தொற்று நோயின் காரணமாக சுற்றுலா தொழிலின் பின்னடைவின் காரணமாக குத்தகைதாரரினால் நிவாரணத் திர்வு இலங்கை தேயிலைச் சபையிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டு பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 2021 ஏப்ரல் மாதத்திலிருந்து 2021 செப்தெம்பர் மாதம் வரை குத்தகை தவணைப் பணத்திற்கு ஒரு நிவாரணம் வழங்கியதன் பின்னர் குத்தகைதாரரிடமிருந்து கிடைக்க வேண்டிய அனைத்து அறவீடுகளும் செம்மையாக்கப்பட்டதன் பின்னர் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 986,253 தொகை அறவிட வேண்டி இருந்தது. | வெளித்தரப்பினர்களிட மிருந்து அறவிட வேண்டிய வாடகை வருமானத்தினை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ‘‘ரீ மோமன்ட்ஸ்’’ எனும் பெயரிலான கொழும்பு தேயிலை விற்பனை | சாத்தியவள ஆய்வின்றி ஆரம்பித்தல் மற்றும் கவனயீனமாகச் செயற்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக தொடக்க புலனாய்வினை | இந்த நட்டத்திற்காக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளங்கண்டு நட்டத்தினை அறவீடு |

| | | | |
|---|---|---|---|
| | நிலையத்திலிருந்து சபைக்கு ரூபா 62,603,006 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு செயலாளரின் 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கவனயீனமாக செயற்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு பதிவுசெய்து கொள்ளப்பட்டுள்ளது. | செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 32,132,088 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட நோய்த்தடுப்பு இரசாயன ஒருங்கிணைப்பு பகுப்பாய்வு இயந்திரம் (Liguid Chromatography Mass Spectrometer) எதிர்பார்த்த பொருள் விபரக்குறிப்பிற்கு இணங்கியிருக்காததன் காரணமாக இன்று வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்காததுடன் கொள்வனவு செய்யும் போது இடம் பெற்றுள்ள ஒழுங்கீனம் தொடர்பாக அப்போது ஆய்வு கூடத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையாற்றிய உதவிப் பணிப்பாளருக்கு எதிராக குற்றப் பத்திரம் வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின் தீர்ப்பினை தள்ளுபடி செய்து மீண்டும் ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தும் மீளாய்வாண்டின் இறுதியளவில் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு சபைக்கு முடியாதிருந்தது. குற்றம் | உரிய விடயத்திற்காக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு அறிக்கை 2024 மே 03 ஆந் திகதி பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு இணங்க சட்ட மா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொருள் விபரக் குறிப்பிற்கு இணக்க மற்ற பெறுகைகளின் காரணமாக சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுமத்தப்பட்ட உதவிப் பணிப்பாளர் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ஓய்வுபெற்று இருந்ததுடன் சபையினால் ரூபா 1,559,775 பணிக்கொடை பணமும் உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒழுக்காற்று விசாரணைக்காக ரூபா 205,454 தொகையும் சபையினால் செலவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 2012 யூன் 19 ஆந் திகதி நடைபெற்ற இலங்கை தேயிலைச் சபையின் பொதுமுயற்சிகள் தொடர்பான குழுவின் பணிப்புரை இலக்கம் 11 இன் பிரகாரம் சபையினால் 2003 ஆம் ஆண்டின் போது மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு வழங்கிய ரூபா 25,000,000 கடனுக்காக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஹந்தானையில் அமைந்துள்ள “Ceylon Tea Museum” இன் உரிமையை தேயிலைச் சபைக்கு ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் இன்றுவரை சொத்தின் உரிமையைப் பொறுப்பேற்பதற்கு அல்லது கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2020 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தேயிலைச் சபையினால் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு ரூபா 10,000,000 கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அவற்றில் ரூபா 1,000,000 மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | கடன் பணம் தொடர்பாக எதிர்காலத்தில் கலந்துரையாடி நிரந்தர இணக்கப்பாட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபையினால் வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடனை அறவீடு செய்வதற்கு அல்லது முறைப்படியாக தீர்த்துவைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (எ) இலங்கை தேயிலைச் சபையின் ரூபா 750 மில்லியன் நிதி பங்களிப்பில் சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிதகார சபையின் மூலம் அமுல்ப்படுத்தப்படுகின்ற நேரடி தேயிலைப் பயிர்ச் செய்கை செயற்திட்டத்திற்காக சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீளாய்வாண்டில் ரூபா 150 மில்லியன் பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக இரு தரப்பினர்களுக்குமிடையே எந்த புரிந்துணர்வு உடன்படிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெருந்தோட்ட அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டதற்கு இணங்கவும் பெருந்தோட்ட அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கவும் 2023/526/107 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபையின் பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் வழங்கிய அங்கீகாரத்திற்கு உட்பட்டு இந்த நேரடி தேயிலை பயிர்ச் செய்கை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இன்றுவரை இருதரப்பினர்களுக்குமிடையே எந்த புரிந்துணர்வு உடன்படிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. | இரு தரப்பினர்களுக்குமிடையே இடம்பெறுகின்ற செயற்திட்ட செயற்பாடுகள் மற்றும் நிதிகள் சம்பந்தமாக முறைப்படியான உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) ‘‘சிலோன் ரீ’’ இற்காக உலகளாவிய மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்சிசித்திட்டத்தின் கீழ் பாரம்பரியமான உயர்ந்த மட்டத்திலான விளம்பரத்திற்காக தொலைக்காட்சி ஊடகத்தினை பயன்படுததுவதற்கு ஆங்கில மொழியில் தொலைக்காட்சி வியாபார விளம்பரத்தை உருவாக்குவதற்கும் அதனை சீனா, ஜப்பான், அரபு, உக்ரேன், ஜேர்மன் மற்றும் துருக்கி மொழிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட மொழி பெயர்பிற்காகவும் 2016 இலிருந்து 2020 ஆம் அண்டு வரை ரூபா 174,332,138 செலவு செய்திருந்தும் அந்த வியாபார விளம்பரங்களை மேற்கொள்வதற்குத் தேவையான ஊடகத்தை | உலகளாவிய மேம்பாட்டு நிகழச்சித்திட்டத்தின் கீழ் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை பூர்த்திசெய்வதற்குரிய ஒப்பந்தத்தை வழங்குதல் 2016-11-06 ஆந் திகதியாக இருந்ததுடன் அதற்கிணங்க 31 அம்சங்களை பூரணப்படுத்தும் ஊடகத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் ஊடகத்தை கொள்னவு செய்தல் சம்பந்தமாக உரிய ஒப்பந்தம் 2018-03-21 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் அதற்கிணங்க 2023-03-20 ஆந் திகதியளவில் பூரணப்படுத்தப்பட்டிருந்ததானது ஊடக மீளாய்வு மற்றும் ஊடகத்தை கொள்வனவு செய்வதற்குத் தேவையான திட்டங்களை தயாரிப்பது மாத்திரமாகும். | இந்த ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் நிகழத்தக்க மற்றும் எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு உள்ள இயலுமை தொடர்பாக முறையான மதிப்பீட்டினை மேற்கொண்டு அதனை அடிப்படையாகக் கொண்டு உலகளாவிய மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்தல் மற்றும் அது சம்பந்தமாக திட்டங்கள் தயாரிக்கப்படாததனால் தொலைக்காட்சி ஊடகத்தில் விளம்பரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 39,832,808 செலவு செய்து உருவாக்கப்பட்ட 31 ஆக்கத்திறனான செயற்பாடுகளும் மீளாய்வாண்டின் இறுதியளவில் உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | இத்தாமதத்திற்காக கொவிட் தொற்றுநோய் நிலைமை தாக்கமளித்திருந்தது. 2019 இல் ஊடகத்தை கொள்வனவு செய்வது தொடர்பான கேள்வி நடைமுறையானது ரஷ்யா மற்றும் உக்ரேன் சார்பாக ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் வெளித் தடைகள் மற்றும் இலங்கை பெறுகை நடைமுறை பொருந்தியிருக்காமையின் காரணமாக ஊடகத்தை கொள்வனவு செய்யும் நடைமுறை மற்றும் உலகளாவிய மேம்படுத்தல் நடவடிக்கையை ஆரம்பித்தல் தாமதமடைந்துள்ளது. | |
| (ஆ) | இலங்கை தேயிலை சபையினால் அமுல்ப்படுத்தப்படுகின்ற "சிலோன் ரீ" இற்காக உலகளாவிய மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளின் கீழ் www.pureceylontea.com பிரதான இணையதளம் மற்றும் ஏனைய மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட இணைய தளங்களின் பிரதான அம்சங்கள் மற்றும் இணைய தளங்களின் மூலம் நேரடியாக ஏற்றுமதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடமிருந்து சிலோன் ரீ இனை கட்டளையிடுவதற்கு முடியுமான வகையில் இணையதள கொள்வனவுகளுக்கான இணைய வழி வசதிகளை வழங்குதல் இடம்பெறுகின்ற Where to buy இன் URL இறகு வெளிநாட்டு பாவனையாளர்கள் அணுகுதல் போன்ற செயற்பாடுகள் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளுக்கு இணங்க அந்த | இச் செயற்பாடுகளின் குறைந்த பயன்பாடு இடம்பெறுவதானது உலகளாவிய மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்படாமை மற்றும் "Marketing Cell" ஸ்தாபிக்கப்படாமை ஆகிய விடயங்களின் மீதாகும். இலங்கை தேயிலை சபையில் அமுல்ப்படுத்தப்படுகின்ற உலகளாவிய தேயிலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் இச்செயற்பாட்டினையும் உள்ளடக்கி இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகள் சம்பந்தமாக தொடக்க புலனாய்வினை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சர்வதேச ரீதியாக பாவனையாளர்/ நுகர்வோர் கவர்ச்சிகரமான இணையத்தளங்களுக்கு அணுகுவதன் மூலம் உலகளாவிய மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக இணையதளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நுழைவுகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது என பாவனையாளர் தொடர்பு இணையவழி பற்றிய தரவுப் பகுப்பாய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் சர்வதேச ரீதியாக வாடிக்கையாளர்/ பயனாளிகளின் கவர்ச்சி இணைய தளத்திற்கு கிடைக்கவில்லை எனவும் அதற்கிணங்க ரூபா 172,939,768 கிரயத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இணைய தளத்தின் மூலம் உலகளாவிய மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எதிர்பார்த்த குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக வினைத்திறனான செயற்பாடு மேற்கொள்ளப்படவில்லை எனவும் இணைய தளத்தை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | இலங்கை தேயிலையை உலகளாவிய ரீதியாக மேம்படுத்துவதற்காக ஊடகப் பரீட்சிப்பு மற்றும் ஊடக திட்டமிடலுக்காக 2019 இலிருந்து 2023 வரையான காலப்பகுதிக்குள் ரூபா 107,088,740 பணம் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் தயாரிக்கப்பட்ட ஊடகத்திட்டங்களுக்கு மத்தியில் சிலி நாட்டிற்காகத் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஊடக திட்டத்தினை தவிர்த்து ஏனைய அனைத்து நாடுகளுக்காகவும் சமர்ப்பிக்கப்பட்ட ஊடகத் திட்டங்களின் காலம் கடந்திருந்த போதிலும் அச்செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதிவரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஊடகத் திட்டங்களை அமுல்ப்படுத்துதல் உரிய காலப்பகுதிக்குள் இடம்பெறவில்லை என ஏற்றுக்கொள்கிறேன். | ஊடகத்திட்டங்களை நிகழ்காலத்தில் மற்றும் எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு உள்ள இயலுமை தொடர்பாக முறையான மதிப்பீட்டினை மேற்கொண்டு அத்திட்டங்களை உலகளாவிய மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால நீடிப்புடன் 2023 மார்ச் 20 ஆந் திகதி வரையான காலத்தின் போது உடன்படிக்கை செய்த | இலங்கை தேயிலை சபையின் மூலம் ஊடகத்தை கொள்வனவு செய்தல் மற்றும் உலகளாவிய | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியின் போது நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய உடன்படிககை செய்யப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | தனியார் கம்பனியால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளுக்கு மத்தியில் தெரிவுசெய்யப்பட்ட 12 நாடுகளுக்குள் ஊடக மீளாய்வு மற்றும் ஊடக திட்டமிடல் நடவடிக்கை மாத்திரம் முடிவடைந்திருந்ததுடன் ஊடகத்தை பட்டியல்படுத்துதல், ஊடகத்தை கொள்வனவு செய்யும் ஆலோசகராக செயற்படல், பிரதான செயலாற்றல் குறிக்காட்டியை பிரேரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், ஊடக நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றலினை மதிப்பீடு செய்தல், முழு நேர டிஜிடல் ஊடக முகாமையாளர் ஒருவரினை நியமித்தல் முதலிய உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்பாடுகளை பூரணப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேம்படுத்துதல் செயற்பாட்டினை தொடங்கிவைப்பதற்கு உட்பட்டு டேன்ட்சு கிரான்ட் நிறுவனத்தின் மூலம் ஊடகத்தை பட்டியல்படுத்துதல் மற்றும் ஊடகத்தை கொள்வனவு செய்வதற்காக ஆலோசனை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவ்வாறே ஊடகத்தை கொள்வனவு செய்வதற்கு உட்பட்டு முழு நேர டிஜிடல் ஊடக முகாமையாளரினூடாக Digital Media Optimization மேற்கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகும். அவ்வாறே உலகளாவிய மேம்படுத்துதல் செயற்பாட்டின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் ஆலோசகரின் கடமையாகும். எனினும் இந்த உலகளாவிய மேம்படுத்துதல் ஊடகத்தை கொள்வனவு செய்வதற்காக கோரப்பட்ட எந்தவொரு கேள்வியும் காணப்படுகின்ற பெறுகை நடைமுறைகளுடன் பொருந்தியிருக்காததன் காரணமாக வெற்றியளித்திருக்காததனால் மேற்கூறிய செயற்பாடு டென்ட்சு கிரான்ட் தனியார் நிறுவனத்தினால் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் உருவாகியிருக்கவில்ரலை. அவ்வாறே இதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணமும் செலவு செய்யப்படவில்லை. | செயற்பாடுகளை சிறந்த மட்டத்தில் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை தேயிலையை மேம்படுத்துவதற்காக 2018 மார்ச் 21 ஆந் திகதி இலங்கை தேயிலை சபைக்கும் உடன்படிக்கை செய்யப்பட்ட கம்பனிக்குமிடையே கையொப்பமிடப்பட்ட | திருத்திய உடன்படிக்கையின் ஒரு பிரதி பொருந்தோட்ட அமைச்சின் யெலாளருக்கு 2022/09/09 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் | உடன்படிக்கையின் பிரகாரம் காலம் நீடிக்கப்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் கம்பனிக்கும் சபைக்குமிடையே |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் உடன்படிக்கை காலம் நீடிப்புச் செய்யப்படுகின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் இரண்டு தரப்பினர்களாலும் எழுத்துமூலம் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2021 மார்ச் 21 ஆந் திகதியிலிருந்து 2023 மார்ச் 20 ஆந் திகதி வரையான காலம் தொடர்பாக உடன்படிக்கை காலத்தை நீடிப்பதற்காக கம்பனிக்கும் சபைக்கும் இடையே கையொப்பமிட்பட்ட ஒரு உடன்படிக்கை இல்லாதிருந்ததுடன் அக்காலப்பகுதியில் கம்பனிக்கு ஊடகத் திட்டத்திற்காக ரூபா 58,066,874 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அதன் பிரதி பெருந்தோட்ட அமைச்சின் மூலம் வேண்டப்பட்டுள்ளது. | உடன்படிக்கை செய்து கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஊ) | இந்து இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) இன் கீழ் தேயிலைக்காக விருப்புக்கட்டண விகிதம் (Preferential Tariff Rate Quota) காணப்பட்டிருந்தும் அதில் குறிப்பிடத்தக்க அளவான பயன்பாடு 2021 இலிருந்து 2023 வரை அறிக்கையிடப்படாதிருந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் மேற்கொண்ட மொத்த ஏற்றுமதியின் அளவு முறையே 10 சதவீத்தினாலும் 100 சதவீத்தினாலும் வீழ்ச்சியடைந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஏற்றுமதி / சந்தை நுழைவு மட்டுப்பாடு, சான்றுபடுத்துதல் மற்றும் தேவைப்பாட்டிற்கு இணங்கியிருத்தலுக்கான நீண்ட தாமதம் போன்ற தீர்வையற்ற தடைகள் காணப்படுவதன் பெறுபேறாக உடன்படிக்கையினூடாக கோடா உச்ச அளவு பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது காணப்பட்டதுடன் அவதானிப்புக்களில் குறிப்பிட்ட அடையாளங்காணல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் மூலம் உச்சஅளவு பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு உள்ள மட்டுப்பாடுகளை தவிர்த்து ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | இலங்கையின் முழு உற்பத்தியும் ஏற்றுமதியும் படிப்படியாக அதிகரிக்காமையின் காரணமாக 2011 ஆம் ஆண்டின் போது 18 | அவதானிப்பில் அடையாளங்காணப்பட்ட வீழ்ச்சி இடம்பெற்றுள்ளது என ஏற்றுக்கொள்கிறேன். ஏனைய உற்பத்தி மற்றும் | தேயிலை உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கும் உலகளாவிய |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதமான இலங்கையின் தேயிலைக்கான உலகளாவிய தேயிலைச் சந்தைப் பங்கானது (World Prod. Share) மீளாய்வாண்டளவில் 3.88 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது என தேயிலைக் குழு செய்தி பிற்சேர்க்கையின் (Supplement to Annual Bulletin of Statistics 2023) பிரகாரம் அவதானிக்கப்பட்ட போதிலும் சந்தைப்பங்கினை அதிகரிக்கச் செய்வதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுமதி நாடுகளினால் தமது உற்பத்தியை அதிகரித்தல் சர்வதேச சந்தைக்கு சமர்ப்பித்தலின் மூலம் இதற்காக தாக்கம் ஏற்பட்டுள்ளது. | சந்தையில் பங்களிப்பினை அதிகரிக்கச் செய்வதற்கும் தரத்தில் சிறந்த சர்வதேச நியமங்களுக்கு இணங்கியதான பொருத்தமான தேயிலைக்கான முதலீட்டினை வரிவுபடுத்துவதற்காக தேவையான ஊக்குவிப்புக்களை சபையினால் மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஏ) | பசளைகளை வழங்குவதற்காக 08 சதவீத வட்டி அடிப்படையில் சபை 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு மொத்தமாக ரூபா 3,093,468,442 தொகை கடன் வழங்கப்பட்டிருந்தது. சபைக்கும் உரிய தரப்பினர்களுக்குமிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 2.4 ஆம் பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியின் முடிவில் கடன் தவணைப் பணத்தை செலுத்த தவறுகையில் கிடைக்க வேண்டிய மீதியின் அடிப்படையில் வருடாந்தம் 21 சதவீத தாமத வட்டி அறவிட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது தாமதித்து தீர்த்துவைத்த கடன் மீதியின் அடிப்படையில் எந்த தாமத வட்டியும் சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாமதித்து கிடைத்த கடன் மீதிகளின் மீது அறவிடப்பட வேண்டிய தாமத வட்டியினை எதிர்காலத்தில் சபையினால் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொழிற்சாலைகளுக்கும் சபைக்குமிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதான களஞ்சியத்தின் எழுதுகருவி இருப்பில் உள்ளடக்கப்பட்ட | 2022 ஆம் ஆண்டின் போது 500 தேயிலை கோப்ப | தேவைப்பாட்டினை சரியாக |

| | | |
|---|---|---|
| நீண்டகால அசைவற்ற இருப்பாகக் காணப்பட்ட ரூபா 1,427,184 பெறுமதியான 583 செரண்டிப் ரீ பில்ம் DVD நாடாக்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,007,580 பெறுமதியான 500 டீ கோப்பைகளில் 420 டீ கோப்பைகள் மீளாய்வாண்டின் ஆண்டின் இறுதி வரையும் பயன்படுத்தப்பட்டிருக்கவிலை.<br>தேரவைரப்பாட்டினை சரியாக அடையாளங்காணாமையின் காரணமாக மெதுவாக அசையும் மற்றும் நீண்டகாலமாக அசைவற்ற இருப்புக்களை கொள்வனவு செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட நிதி விளைவற்றுக் காணப்பட்டது. | தொகுதிகள் தயாரிக்கப்பட்டதானது உலகளாவிய மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் Key Opinion Leaders (KOLS) களினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான மேம்பாட்டு மற்றும் சந்தைப்படுத்துதல் தந்திரோபாயமான Un-boxing நடைமுறையின் கீழ் இவ்வாறு சிலோன் ரீ வியாபாரக் குறி இடுவதற்கு உட்படுத்தப்பட்ட தேயிலை தொகுதியை ஈடுபடுத்துதல் மேற்கொள்வதற்காகவாகும். அதற்கிணங்க இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைத் தொகுதி தற்பொழுது மேற்கொள்ளப்பட்ட KOLS மேம்படுத்தும் நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.<br>களஞ்சியத்தில் உள்ள செரன்டிப் ரீ பில்ம் 2012 ஆம் ஆண்டின் போது 1000 DVD பிரதிகள் இயற்றப்பட்டுள்ளன.<br>Youtube மூலம் பதிவறக்கம் செய்வதற்கு உள்ள இயலுமையை காரணமாகக் கொண்டு தற்பொழுது இந்த வீடியோவின் விற்பனை பிற்போடப்பட்டுள்ளது. | அடையாளங்கண்டு சிறந்த மட்டத்தில் இரப்பினை கொள்வனவு செய்வதற்கும் அந்த இருப்பினை உரிய குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்தவுதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகள் தாமதமடைதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தேயிலைக் கைத்தொழிலுக்காக தகவல் தொழில்நுட்ப முறைமையை தயாரிப்பதற்காக ரூபா 53,964,995 ஒப்பந்த பெறுமதியின் அடிப்படையில் சபையின் உதவி பணிப்பாளரின் (தகவல் தொழில்நுட்பம்) உறுதிப்படுத்தலோடு மொத்தமாக ரூபா 15,716,148 தொகை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒரு | கால அட்டவணையின் பிரகாரம் 18 மாத காலத்திற்குள் இச்செயற்திட்டத்தினைப் பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் 3.5 ஆம் நிபந்தனைக்கு இணங்க மேற்கூறிய பெறுகைக்குரிய | செயலாற்றல் பிணையை நீடிக்கும் நடவடிக்கை மற்றும் தொழில்நுட்ப முறைமையை ஸ்தாபிக்கும் நடைமுறையை துரிதமாக முடிவுறுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| தியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 18 மாதங்களின் போது செயற்பாட்டினை பூர்த்தி செய்ய வேண்டிய போதிலும் 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த தனியார் நிறுவனத்தினால் வழங்கிய ரூபா 26,982,497 தொகையான செயலாற்றல் பிணை 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி முடிவடைந்திருந்தும் கணக்காய்வுத் திகதி வரை அதனை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் பிணையை நீடிப்பதற்காக வழங்குனரான தனியார் நிறுவனத்துடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளதுடன் உரிய உடன்படிக்கையை நாள்துரையாக்குவதற்கு தேவையான அடிப்படைக் கட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 01 ஆண்டிற்கும் 04 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக உயர் முகாமைத்துவ மட்டத்தினைச் சேர்ந்த பிரதிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்), பணிப்பாளர் (மேம்படுத்துதல்) மற்றும் பணிப்பாளர் (நிருவாகம்) ஆகிய 03 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் மனிதவளங்கள் ) பதவியை நிரப்புவதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் அதுவரை பொருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிலிருந்து பதில் கடமை பார்ப்பதற்காக ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். பணிப்பாளர் (விளம்பரம்) பதவி ஐக்கிய எமிரேட் நாட்டினை அடிப்படையாகக் கொண்டு அந்த வலயத்தில் தேயிலையை விளம்பரப்படுத்தல் நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பதவியானதுடன் அந்த தேயிலையை விளம்பரப்படுத்துதல் அலுவலகத்தை ஆரம்பித்தல் சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்னர் அப்பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே | சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக செயலாற்றலினை அதிகரிப்பதற்கும் அத்தியவசியமான பதவிகளுக்காக உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆளணியை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பிரதிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) பதவி பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு இணங்க உரிய பதவியை குறைப்பதற்காக 2023-10-13 ஆந் திகதி செயலாளர் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்கு வரைபாக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டது.